## சிறிய கோவிந்தப் பெருமாள்

## வாழி திருநாமம்

மருவாரும் மழலை நகர் வாழ வந்தோன் வாழியே
மாசி தனில் அசுவதி நாள் வந்துதித்தான் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் குறை தீர்த்தான் வாழியே
சீர் திருமலை நம்பி தனைச் சிந்தை செய்வோன் வாழியே
பாராரும் எதிராசன் பதம் பணிந்தோன் வாழியே
பதின்மர் கலை உட்பொருளைப் பகருமவன் வாழியே
ஏராரும் எம்பாரின் இணை அடியோன் வாழியே
எழில் இளைய கோவிந்தனார் இணை அடிகள் வாழியே

---